7th May 1957] [Sri C. Subramaniam]

மக்களிடையே பரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் பொழுது சர்க்கார் முன்வந்து அதைத் தடுப்பது என்பது இப்பொழுது நம்முடைய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற சுதந்திரத்தைப் பறிப்பது ஆகும். ஆனால் அப்படி தங்களுடைய அபிப்பிராயத்தை பரப்பும் மூலமாக சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கை ஏதேனும் ஏற்படு மேயானால், உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண் டியது மிகவும் அவசியம். இந்த இரண்டையும் ஆலோசனை செய்துதான் போதிய அளவு போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. சட்டங்களை மீறி ஏதாவது காரியம் நடக்குமேயானால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த இயக்கத்தைப்பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள சர்க்கார் தவறிவிட்டது என்று சொல்லுவது, முதலில் விஷயங்களை நன்கு தெரிந்துகொள்ளாமல் அவ்வாறு சொல்லப்படுகிறது என்று நான் கருது கிறேன். போதிய அளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கி ன்றன. அதன் காரணமாகத்தான் இது வரையில் எந்த விதமான கலவரமோ, அடிதடியோ நடக்கவில்லை. சர்க்கார் இந்த விஷயத்தை கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள். அவ்வப்பொழுது அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும், தயவு தாக்ஷண்யமில்லாமல் எது நியாயமோ, எது அவசியமோ அதை செய்வதற்கு சர்க்கார் தயங்க மாட்டார்கள் என்பதையும் இந்த சபையிலே நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமது எதிர்க்கட்சித் தலைவர் இந்த இயக் கத்தைப்பற்றி அரசியல் " ஸ்டண்டு " என்று சொன்னார்கள். நானும் கூட இந்தத் தீர்மானத்தைப்பற்றி சொல்லுவதானால் இதுவும் ஒரு அரசியல் "ஸ்டண்டு" என்று சொல்லமுடியும். (ஆரவாரம்.) ஆனால் இந்தத் தீர்மானம் ஒத்திவைப்பு பிரேரணையாக எடுத்துக்கொள்ள தகுதியில்லாது இருப்பதால் நான் அதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்தச் சபையின் எல்லா நடவடிக்கைகளையும் ஒத்திவைத்துவிட்டு இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டும் என்கின்ற அளவுக்கு இந்தத் தீர்மானத்திலே எந்த விதமான தகுதியும் இல்லாத காரணத்தினாலே, இதை நிராகரிக்கவேண்டுமென்று கனம் சபாநாயகரை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : In my opinion this adjournment motion does not satisfy the conditions necessary for admission of an adjournment motion. Though of recent origin, it is not urgent. It has not been shown how the Government have failed in doing their duties. The matter involved raises no more than the ordinary administration of law. I, therefore, rule this motion out of order. 11-20 a.m.

(2) STRIKE THREAT BY VILLAGE OFFICERS.

Mr. SPEAKER : I have received notice of another motion under Rule 41 of the Assembly Rules from the hon. Member Sri M. Kalyanasundaram which reads as follows :

" I move that the business of the House be adjourned for discussing a definite matter of urgent public importance, namely, the failure of the Government to meet the just demands of the Village Officers which has created a serious situation resulting in threats of strike by the Village Officers and counter-threats by the Government, which are likely to disturb the village atmosphere ".

Before I give my ruling on the motion I would like to hear the hon. Member who has given notice of the motion.

[7th May 1957

SRI M. KALYANASUNDARAM : இந்த விஷயம் அவசரம் என்பதில் இருவித அபிப்பிராயம் இருக்கமுடியாது என்று நினைக்கிறேன். ஏனென்றால், மே மாதம் 15-ம் தேதியன்று வேலை நிறுத்தம் செய்யப்போவதாக கிராம ஊழியர்களின் சங்கத்தின் சார்பிலே அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. சர்க்கார் தரப்பில் "அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். ஆனால், கிராம ஊழியர்கள் 'ஸ்டிரைக்' செய்வோம் என்று சொல்லுவதனால், நாங்கள் எங்கள் முடிவை அறிவிக்க முடியாது" என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். ஆகவே, இது இரண்டு பக்கத்தாருக்கும் ஒரு கௌரவ பிரச்னை ஆக இருக்கிறது. அவர்களுடைய குறையைப் போக்க வேண்டியது நியாயம் என்று சர்க்கார் ஒப்புக்கொண்டு விட்ட பிறகு, அவர்கள் கண்ணியமாக நடந்துவிட்டால் எந்தவிதமான கௌரவக் குறைவும் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. முடிவை வெளியிடுவதற்குத் தயங்குவது சரி அல்ல. சட்டசபை கூடுவது இன்றுதான் கடைசி நாள் என்று நினைக்கிறேன். சட்டசபை இன்னும் நடக்குமேயானால், வேறொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த விஷயத்தைப் பற்றிப் பேசியிருப்பேன். ஆகவேதான், இந்த விஷயத்தில் அங்கத்தினர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கும், யோசனை சொல்லுவதற்கும், சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருடைய யோசனைகளை நேற்று சொல்லியிருக்கலாம். அதற்குச் சந்தர்ப்பம் இருந்தது. அதை மறந்துவிட்ட காரணத்தினாலோ என்னமோ, இன்றைக்கு ஒரு தீர்மான ரூபமாக, "நான் உங்களை மறக்கவில்லை" என்று கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சொல்லும் முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது இப்பொழுது ஏற்பட்ட பிரச்னை அல்ல. அநேக வருஷ காலமாக, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு எந்தவிதமான ஊதியம் கொடுக்கப்படவேண்டும், அவர்களுடைய வேலை எந்த முறையில் அமைய வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசனையிலிருந்து வருகிறது. இது ஒரு சுலபமான காரியம் அல்ல. ஏனெனில், தொன்றுதொட்டு பல நூற்றாண்டுகளாக நடந்துவரும் ஒரு முறையை மாற்றுவது என்றால், எந்தவிதமான முறையில் மாறுதல்கள் செய்யவேண்டும் என்றெல்லாம் யோசனைசெய்து தீர்க்க வேண்டிய பிரச்னையாக இருக்கிறது. ஆகையால்தான் இது உடனடியாகத் தீர்க்கக்கூடிய பிரச்னை அல்ல என்று நான் சொல்லுகிறேன்.

வேலை நிறுத்த நோட்டீஸை ஆஸ்பதமாக வைத்துக் கொண்டு இந்த அவசரப் பிரேரணையை கனம் அங்கத்தினர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை அவசரக் காரியமாக எடுத்துக் கொள்ள முடியாது. "ஸ்டிரைக்" நடந்தாலும் நடக்கலாம், நடக்காமலும் இருக்கலாம். அது நடக்காது என்பது என்னுடைய நம்பிக்கை. ஆனால், கனம் அங்கத்தினர் நடக்க வேண்டும் என்று விரும்பலாம். அது நடக்காது என்று அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது இந்த சபை, மற்ற காரியங்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு ஆலோசனை செய்யக்கூடிய அவசரப் பிரச்னை இது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிரேரணை சபைமுன் கொண்டு வருவதற்கு தகுதி உள்ளதல்ல என்பதையும் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : In my opinion, this motion does not satisfy the conditions necessary for the admission of such motions. The matter is certainly not of recent occurrence. I am not quite sure whether it is very urgent also. I am satisfied that the matter involved is no more than what arises in the course of ordinary governmental administration. Therefore I rule the motion out of order.